2020 செப்டம்பர் 15]

அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன காரணத்தினால் துறைமூலம் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக அவசியமிருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

மீன் வளக் கல்லூரி

***35841—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதியில் மீன் வளக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற தத்துவத்தை உதிர்த்து, மறைந்தும் மறையாமல் நமது உள்ளங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, நம்மையெல்லாம் ஆளாக்கிய பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்தில் அவர்களை வணங்கி, பொன்மனச் செம்மல், சத்துணவு தந்த சரித்திர நாயகன், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களையும், வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் அன்றும், இன்றும் என்றென்றும் நிற்கின்ற, மாபெரும் தலைவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர்

அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். COVID காலத்தில், இந்தக் கூட்டத்தை இங்கு சிறப்பான முறையில் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குக் குறிப்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கொஞ்சம் humorous ஆக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள்,** என்று சொன்னார்கள். இந்தச் செய்தி வெளியில் வந்தால் நன்றாக இருக்காது, அதனை தயவுசெய்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அதுதான் பேப்பரில் வரும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தேவையில்லை என்றால் நீக்கிவிடலாம். (குறுக்கீடு) நீக்கிவிடலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் மீன் வளக் கல்லூரி தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் தொகுதியில் தேங்காய்ப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தினை ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகமாக– Integrated Harbour ஆக அறிவித்து கட்டுமான விரிவாக்கம் செய்வதற்காக ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கிள்ளியூர் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் உள்ள மொத்த மீனவர்களில் 22 விழுக்காடு மீனவர்கள் கன்னியாகுமரி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 செப்டம்பர் 15]

மாவட்டத்தில் உள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் ஆழ்கடல் மீன் பிடிப்பதில் திறமை மிக்கவர்கள் அதிகமாக உள்ளனர். எங்களுடைய மாவட்டத்தில் மயிலாடி பகுதியில் செயல்பட்டு வரும் மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் முழுக்க முழுக்க சுயநிதிக் கல்லூரியாக, self–finance கல்லூரியாகச் செயல்படுகின்றது. அங்கிருக்கும் ஒவ்வொரு துறை படிப்பிற்கும், ஒவ்வொரு பருவநிலை படிப்பிற்கும் சுமார் 75,000 ரூபாய் கட்டணம் செலுத்தி படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. நடுத்தர வேலையில் உள்ள மக்களின் குழந்தைகள் யாரும் படிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகையால், மாணவர்களுடைய நலன் கருதி, சுயநிதிக் கல்லூரியாகச் செயல்படுகின்ற மீன் வளக் கல்லூரியை முழுமையான குறைந்த கல்விக் கட்டணம் செலுத்தக்கூடிய அரசுக் கல்லூரியாக அறிவிக்க வேண்டும். அதுபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடி என்னும் கிராமத்தில் 26–9–1912–ல் பிறந்து குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அமைச்சரவையில் 1957 முதல் 1962 வரை மீன் வளத் துறை மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையில் பொறுப்புடன் சிறப்பாகப் பணியாற்றி, பாரம்பரிய மீன்பிடி தொழில்நுட்பத் திட்டத்தை அறிமுகம் செய்த மாண்புமிகு லூர்தம்மாள் சைமன் அவர்களுடைய பெயரை இந்தக் கல்லூரிக்குச் சூட்ட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்களுக்குக் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மணி மண்டபம் அமைத்துத் தரவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருப்பெயரில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகம் மாண்புமிகு அம்மா அவர்களால் 2012 ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. இப்பல்கலைக்கழகத்தின்கீழ்

நாகப்பட்டினம், தூத்துக்குடி, பொன்னேரி, தலைஞாயிறு, வாணியஞ்சாவடி, மாதவரம் ஆகிய இடங்களில் கிட்டத்தட்ட 7 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 11 உயர்நிலை பட்டப் படிப்புகள் உள்ளன. இந்த 11 உயர்நிலை பட்டப் படிப்புகளைப் போன்று இந்தியாவில் வேறு எங்கேயும் இல்லை. இந்த 11 உயர்நிலை பட்டப் படிப்புகள் தமிழ்நாட்டிலே, நம்முடைய அம்மா பெயரிலான அந்தப் பல்கலைக்கழத்தில் மட்டும்தான் இன்றைக்கு பயிற்றுவிக்கப்படுகின்றன என்பது ஒரு வரலாற்று உண்மை. இந்த 16 பாடப் பிரிவுகள் முதுநிலை பட்டப் படிப்புக்கும், 14 பாடப் பிரிவுகள் முனைவர் படிப்புக்கும், 4 பாடப் பிரிவுகள் தொழிற்கல்வி படிப்புக்கும் வழங்கப்படுகின்றன. கிட்டத்தட்ட 1,121 எண்ணிக்கையிலான மாணவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றனர். எனவே, மாணவர்கள் சேர்க்கை (admission) வருங்காலத்தில் கூடுதலாகும்பட்சத்தில், அதை நீங்கள் அரசுக்குத் தெரிவித்தால் அந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், ஒரு கல்லூரியைத் துவங்க வேண்டுமென்று சொன்னால் ஒரு வருடத்திற்குக் கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய் செலவாகும். 5 வருடங்களுக்குக் கிட்டத்தட்ட 981 கோடி ரூபாய் செலவாகும். மேலும், 30 ஹெக்டேர் land–ம் இதற்குத் தேவை. இப்போது ஒரு self–financing college அந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகின்றபட்சத்தில் அதை ஏற்பது குறித்து அரசு முடிவு செய்யலாம் என்கின்ற நிலையைச் சொல்கின்றேன். இப்பொழுது நிச்சயதார்த்தம் முதலில் நடக்கணும். அதற்குப் பிறகுதான் திருமணம். அதற்குப் பிறகுதான் குழந்தை பிறக்கிறது. அதற்குப் பிறகுதான் பெயர் வைப்பது. (குறுக்கீடு) அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கை குறித்து பிறகு நாம் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்பிடிக் கப்பல்கள் மற்றும் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களுக்குத் தேவையான திறமையான மனித வளத்தை உருவாக்குவதற்கான பயிற்சிகளை வழங்க, B.Tech. மீன் வள மாதிரி கலை, தொழில்நுட்ப பட்டப் படிப்புக் கல்லூரியை கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்க தமிழக அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன்.

2020 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கின்றேன். இப்பொழுது self–financing college–ஐ start செய்து சில courses–ஐ அந்த college–ல் teach செய்து கொண்டிருக்கிறோம். தேவை அதிகமாகும்போது அந்தத் தேவையைக் கருத்தில்கொண்டு கண்டிப்பாக அரசு அதைப் பரிசீலிக்கும். அதில் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. ஏற்கெனவே கிட்டத்தட்ட 7 கல்லூரிகள் இருக்கின்றன. நீங்கள் சொல்கின்ற பட்டப் படிப்புகள் எல்லாம் அங்கே இருக்கின்றன. எங்கே வேண்டுமென்றாலும் சேரலாம். Hostel facilities இருக்கின்றன. எல்லா வசதிகளும் இருக்கின்றன. அந்தப் படிப்பைப் படிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

முற்பகல் 10–45

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 வருடங்களுக்கு முன்பு இதே கலைவாணர் அரங்கத்தில் அன்றைய தினம் முதல்வராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய திருக்கரங்களால் திரைப்படத் துறையில் கலைமாமணி என்ற விருதைப் பெற்ற அந்த இனிய நினைவுகளோடு என்னுடைய கேள்வியை எழுப்புகின்றேன். என்னுடைய தொகுதியில், பெசன்ட் நகரில், ஓடைமாநகர்குப்பம் இருக்கின்றது. அங்கே மீனவ மக்கள் கடற்கரை அருகே மீன் வியாபாரம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான கடைகளைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன் அங்காடியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தொலைவில், அதாவது, திருவான்மியூர்

திருக்கோயிலுக்கு அருகே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அங்கே போதுமான இடம் இருந்தால், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியோ, அங்கு வேறு ஏதாவது இடமிருந்தால்கூட மாநகராட்சி மூலமாக அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, மாநகராட்சியின் நிதியைப் பெற்று, நிச்சயமாக அங்கே மீன் அங்காடி திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***4023—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதியில் இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்கெனவே தொடங்கப்பட்டு, அந்தப் பகுதி மாணாக்கர்களுக்கு நல்ல நிலையில் உயர் கல்வி வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.